செய்தி வெளியீடு எண்: 238 நாள் : 27.5.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான உத்தரவின் பேரில், கர்நாடகா மாநிலம், மொல்கிரா கிராமம், பிதார் மாவட்டத்தில் ஏற்பட்ட பறவை காய்ச்சலை தொடர்ந்து, தமிழகத்தில் அந்நோய் பரவாமல் இருக்க எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர், கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளுடன் 27/05/2016 அன்று ஆலோசனை நடத்தினார். த மிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறை மூலம் அண்டை மாநிலங்களை ஒட்டி உள்ள 10 மாவட்டங்களில், 38 சோதனை சாவடிகள் 24 மணி நேரமும் செயல்படத்தக்கவாறு அமைக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்திலிருந்து கோழிகள், முட்டைகள் மற்றும் கோழி தீவனங்கள் ஏற்றி வரும் வாகனங்கள் சோதனை சாவடிகளிலேயே தமிழ்நாட்டிற்குள் நுழைய அனுமதிக்காமல் திருப்பி அனுப்பப்படுகிறது. சோதனை சாவடிகளில் அனைத்து வாகனங்களும் கிருமி நாசினிகள் தெளிக்கப்பட்ட பிறகே மாநிலத்திற்குள் அனுப்பப்படுகிறது. தேவையான மருந்து தெளிப்பான்கள் மற்றும் கிருமி நாசினிகள் அனைத்து சோதனை சாவடிகளிலும் இருப்பில் வைக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 1200 அதிரடி நடவடிக்கை குழு ஏற்படுத்தப்பட்டு தயார் நிலையில் உள்ளன. சார்பு துறைகளான பொது சுகாதாரம், நகராட்சி நிர்வாகம், தென்னக இரயில்வே, வனத் துறை, ஊரக வளர்ச்சி, வணிக வரி துறை, தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கோழி வளர்ப்போர் சங்கம் ஆகிய துறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க கோரப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் மேற்படி துறைகளுடன் சேர்ந்து பறவைக் காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுள்ளார்கள். கால்நடை நோய் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் பறவைகள் சரணாலயத்தில் கண்காணிப்பு செய்து வருகின்றனர். கோழி பண்ணைகள் நிறைந்த இடத்தில் தினசரி கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கால்நடை பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை இயங்கி வருகிறது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9